# தேசிய தினச் செய்தி 2007

என் சக சிங்கப்பூரர்களே,

1. நாம் தேசிய தினத்தை மகிழ்ச்சியான மனநிலையுடன் கொண்டாடுகிறோம். இந்த ஆண்டும் சிங்கப்பூருக்கு இன்னொரு நல்ல ஆண்டாக இருக்கிறது. மொத்தத்தில், இதுவரை நாம் நல்ல வளர்ச்சி கொண்ட நான்கு ஆண்டுகளைப் பெற்றிருக்கிறோம்.

2. நாம் மகிழ்ச்சி அடைவதற்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன:

அ. நமது விளையாட்டாளர்கள் பதக்கங்களை வெல்கின்றனர்

ஆ. நமது சமையல்கலைஞர்கள் அனைத்துலகப் போட்டிகளில் பரிசுகளை வெல்கின்றனர்

இ. நமது தொழில்முனைவர்கள் புதிய தொழில்களைத் தொடங்குகின்றனர்

ஈ. நமது மாணவர்கள் இயந்திர மனிதச் சவால் போட்டிகள், குழுப் பாடகர் விழாக்கள், விவாதப் போட்டிகள், புத்தாக்கத்துடன் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போட்டிகள், கணிதம் மற்றும் அறிவியல் போட்டிகள் போன்ற எல்லா வகையான அனைத்துலக நிகழ்ச்சிகளிலும் சிறப்பாகச் செயல்படுகின்றனர்.

For online reference viewing only

உ. ஃபோர்முயுல ஒன் (Formula One) கார்ப்பந்தயம் மற்றும் ஒருங்கிணைந்த உல்லாசத் தளங்கள் போன்ற புதிய மற்றும் விறுவிறுப்பான திட்டங்களுக்கு நாம் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

3. இந்த ஆண்டின் முதல் பாதியில், பொருளியல் வளர்ச்சி நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமாக, 7.6 விழுக்காடாக இருந்தது. இவ்வாண்டு முழுவதுக்கும், வர்த்தகத் தொழில் அமைச்சு வளர்ச்சி 7 விழுக்காட்டுக்கும் 8 விழுக்காட்டுக்கும் இடைப்பட்டாதக இருக்கும் என உயர்த்தி முன்னுரைத்திருக்கிறது. நல்ல செய்தி என்னவென்றால், முதல் பாதியில் - முன் எப்போதும் இல்லாத எண்ணிக்கையில் - நாம் 111,000 வேலைகளை உருவாக்கினோம். வேலையின்மை விகிதம் மிகவும் குறைவான அளவில் 2.4 விழுக்காடாக இருக்கிறது. தொழில்கள் சிறப்பாக செயல்படுவதால், ஊழியர்கள் நல்ல சம்பள உயர்வுகளையும், கூடுதல் போனஸ் தொகைகளையும் அனுபவிக்கின்றனர்.

4. மேலும் அதிகமான முதலீடுகள் அல்லது அதிகமான ஊழியர்களினால் மட்டும் சிங்கப்பூர் வளர்ச்சி அடையவில்லை. நமது மக்கள்

நிலைமைக்கேற்றவாறு தங்களைச் சரிசெய்து கொண்டு இன்னும் புத்திசாலித்தனமாகச் செயலாற்றுகிறார்கள். நாம் இன்னும் திறன்மிகுந்த வகையில் திட்டமிட்டுப் பணியாற்றுவதோடு, நமது வளங்களை இன்னும் சிறப்பாகப் பயன்படுத்துகிறோம். சுருக்கமாகச் சொன்னால், நாம் நமது உற்பத்தித்திறனை உயர்த்தியிருக்கிறோம். நமது பொருளியலை உருமாற்றுவதற்கான நம் முயற்சிகள் பலனளிக்கின்றன. உலகப் பொருளியல் தொடர்ந்து மாறி வருகிறது. அதற்கேற்றவாறு நாம் நம்மைத் தொடர்ந்து சரிசெய்துகொண்டே இருந்தால், நாம் தொடர்ந்து இன்னும் பல ஆண்டுகளுக்கு வலுவான வளர்ச்சியை அடைய முடியும்.

<u>முன்னோக்கியிருக்கும் சாதகமான சூழ்நிலைகள்</u>

5. ஆசிய நிதி நெருக்கடி ஏற்பட்டு பத்து ஆண்டுகள் ஆகி விட்டன. ஆசியா முன்னேற்றம் கண்டு, மேலும் வளர்ச்சியடைந்து துடிப்பு மிக்கதாக ஆகியிருக்கிறது. சீனாவும், இந்தியாவும் ஆற்றலுடன் முன்னோக்கிச் செல்கின்றன. மேலும், ஜப்பானியப் பொருளியல் மீட்சி அடைந்திருக்கிறது. தென் கிழக்காசியாவில் பிரச்சினைகள் உண்டு என்றாலும், மொத்தத்தில் அது அதன் சமநிலையைத் திரும்பவும் பெற்றுவிட்டது. உயர்வான எரிசக்தி விலைகள், மலேசியா, இந்தோனீசியா போன்ற எண்ணெய் ஏற்றுமதி நாடுகளுக்குப் பயனளிக்கின்றன. இந்த வட்டாரம் மீண்டும் முன்னோக்கிச் செல்கிறது. கடந்த சில நாட்களாக, உலக நிதிச் சந்தைகள் கொந்தளிப்புமிக்கதாக இருந்தாலும், ஆசியாவுக்கான இடைக்கால அடிப்படைகள் தொடர்ந்து வலுவாகவே இருக்கின்றன.

For online reference viewing only

6. இந்த முன்னேறி வரும் ஆசியாவின் மையப் பகுதியில் சிங்கப்பூர் இருக்கிறது. நாம் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய பல வலிமைமிக்க ஆற்றல்கள் நம்மிடம் உள்ளன. அவை:

அ. தூய்மையான மற்றும் ஊழலற்ற சமுதாயம்;

ஆ. கட்டொழுங்கு மிக்க மற்றும் நன்கு கல்வி கற்ற ஊழியர்கள்;

இ. ஓர் ஒன்றிணைந்த பல இன சமூகம்;

ஈ. திறமையான மற்றும் விழிப்புடன் செயல்படும் சிங்கப்பூர் ஆயுதப் படையும், “ஹோம் டீம்” எனப்படும் தாயகக் குழுவும்.

7. முன்னோக்கி பார்க்கையில், நாம் வெற்றியை நோக்கிச் செல்லத் தயாராக இருக்கிறோம். ஏற்கனவே, நிறையத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரீனா சவுத்-தில் நாம் ஒருங்கிணைந்த

உல்லாசத் தளம், வங்கி மற்றும் நிதி மையம் மற்றும் விரைவில் புதிய தாவரவியல் பூங்கா ("பொட்டேனிக் கார்டன்ஸ்") ஆகியவற்றை உருவாக்குகிறோம். நம் கண் முன்னே நம் நகரம் நாளுக்கு நாள் மாறுவதால், நம்மைச் சுற்றி பரபரப்பும், விறுவிறுப்பும் இருக்கிறது. இந்த ஆண்டின் தேசிய தின அணிவகுப்பு கூட வித்தியாசமாகவும், விறுவிறுப்பாகவும் இருக்கிறது. இது முதல் முறையாக, மரீனா பே-யில் நீரில் நடத்தப்படும். மேலும், உலகிலேயே ஆகப் பெரிய மிதக்கும் மேடையில் நடத்தப்படும் இதில் புதிய நகரின் வானளாவிய கட்டடங்கள் நம்மைச் சுற்றி காட்சியளிக்கும்.

8. நாம் ஒரு புதிய நகர மையத்தை மட்டும் உருவாக்கவில்லை, நாம் எல்லா சிங்கப்பூரர்களுக்கும் ஒரு முதல்தர வாழ்க்கைச் சூழ்நிலையையும் உருவாக்குகிறோம். நமது மக்கள் வாழும் நம் வீடமைப்பு வளர்ச்சிக் கழக (வீவக) பேட்டைகளுக்குப் புத்துயிர் அளித்து, அவற்றை பூங்காக்கள் மற்றும் நீர்வழிகளோடு இணைக்கிறோம். மேலும், நாம் தீவு முழுவதையும் உயர்தர பொது போக்குவரத்து முறையுடன் இணைக்கிறோம். அதோடு, ஒவ்வொரு இல்லத்தையும் அதிக வேகம் கொண்ட இணையத்துடன் இணைக்கிறோம். இவை அனைத்தும் உங்கள் இல்லங்களின் மதிப்பைக் கூட்டி, நமது சமூகத்தை இன்னும் நெருக்கமாக ஒன்றிணைக்கும்.

9. பத்தாண்டுகளுக்குள், நம் நகரம் மற்றும் நம் நாடு முழுவதும் முற்றிலும் உருமாற்றப்பட்டுவிடும். உலகம் நம்மைக் கவனித்து வருகிறது. அது ஒரு புதிய சிங்கப்பூராக இருக்கும். ஆனால், அதற்கு நமது சொந்த தனித்தன்மையான அடையாளமும், நம்மால் முடியாது என்றில்லாமல் நம்மால் முடியும் என்ற சிங்க நகரின் துடிப்பும் இருக்கும்.

For online reference viewing only

<u>அதிகரித்து வரும் வருமான இடைவெளி</u>

10. இந்த நாட்டை நாம் ஒன்றாக உருவாக்கினாலும், நம் சமுதாய நல்லிணக்கத்துக்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்குமான ஒரு பெரிய சவாலை நாம் சந்திக்கிறோம். இங்கும், உலகம் முழுவதும் வருமான இடைவெளிகள் அதிகரித்து வருகின்றன. உலகமயத்தினால் நூற்றுக்கணக்கான, மில்லியன் கணக்கான திறன் இல்லாத ஊழியர்கள் உலகப் பொருளியலில் சேர்ந்து, கீழ்நிலையில் உள்ளவர்களின் சம்பளங்களைக் குறைக்கின்றனர். மேலும், விரைவாக மாறுகின்ற தொழில்நுட்பம் வேலைகளை இன்னும் நுட்பங்கள் மிக்கதாக ஆக்குகிறது. திறன்கள் மற்றும் உயர் தகுதி உள்ளவர்களுக்கான தேவை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அவர்களுக்குக் கூடுதல் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன.

11. இந்த உலகப் போக்கை நம்மால் நிறுத்தவோ, நேர்மாறாக ஆக்கவோ முடியாது. ஆனால், சிங்கப்பூரர்கள் இதைச் சமாளிக்க உதவுவதற்கு, நாம் நிறையச் செய்ய முடியும். சிங்கப்பூரின் வெற்றியால் அனைவரும் பயனடைய வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

12. பொருளியலை வளர்ப்பது நமது அடிப்படை அணுகுமுறையாகும். நிறுவனங்கள் விரிவடைந்தால், அனைவருக்கும் இன்னும் அதிகமான, சிறப்பான வேலைகள் இருக்கும். அனைவருக்குமான வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கான வளங்கள் நம்மிடம் இருக்கும். ஒவ்வொரு பிள்ளையும் வாழ்க்கையில் தனக்கென்று தன்னால் ஆன மிகச் சிறந்ததைச் செய்வதற்கு, நாம் அவர்களுக்குப் பல வாய்ப்புகளைக் கொடுக்க முடியும். ஒவ்வொரு குடும்பமும் தத்தம் சொந்த வீடுகளுக்கு உரிமைபெற்றிருப்பதற்கும் நாம் உதவ முடியும் - நமது வீவக வீட்டு உரிமைத் திட்டம் சிங்கப்பூரர்களுக்கான ஆகச் சிறந்த சமூகநலத் திட்டமாகும்.

13. நமது சமுதாயப் பாதுகாப்பு வலைகளை நாம் வலுப்படுத்துகிறோம். “காம்கேர்” (ComCare) மற்றும் வேலைநலத் துணை வருமானத் திட்டம் போன்ற திட்டங்கள் குறைந்த வருமானம் உள்ள குடும்பகளுக்கு உதவுகின்றன. முக்கியமாக, அவர்களும், அவர்களின் பிள்ளைகளும் கல்வி மற்றும் பயிற்சியின் மூலம் வறுமைப் பிடியிலிருந்து விடுபடுவதற்கு நாம் உதவுகிறோம். இதனால்தான் மிகச் சிறந்த கற்கும் சூழல்களை - சிறந்த சில பள்ளிகளில் மட்டுமல்லாமல், ஒவ்வொரு அக்கம்பக்கப் பள்ளியிலும் - நாம் உருவாக்குகிறோம். மேலும், குறைந்த சம்பளம் உள்ள ஊழியர்கள் புதிய திறன்களைக் கற்றுக்கொண்டு, அவர்களின் வேலை செய்யக் கூடிய தன்மையை அதிகரித்து, இன்னும் சிறப்பாக செயல்படுவதற்கு நாம் உதவுகிறோம்.

14. நம் வருமான இடைவெளி அதிகரிப்பதற்கு ஒரு காரணம் நமது மூப்படைந்து வரும் மக்கள்தொகை ஆகும். சிங்கப்பூரர்கள் முன்பு இருந்ததைவிட இப்போது கூடுதல் காலம் வாழ்கிறார்கள். நாம் மருத்துவப் பராமரிப்புச் செலவைக் கட்டுப்படியாகும் அளவில் வைத்திருப்பது, நம் நகரத்தைத் தடைகள் அற்றதாக ஆக்குவது மற்றும் நம் பொது போக்குவரத்தைச் சக்கர நாற்காலிகளுக்கு உகந்ததாக ஆக்குவது ஆகியவற்றைச் செய்து நம் முதியவர்கள் வசதியாக வாழ்வதற்கு நாம் உதவ வேண்டும். வயதான காலத்திற்குப் போதுமான அளவு சேமிப்புகள் உள்ளவர்கள் தங்களுடைய எதிர்காலம் பாதுகாப்பாக இருப்பதாக உணர்வார்கள். ஆனால், வெகு சீக்கிரம் வேலைஓய்வு பெறும் ஊழியர்கள் அவர்களுடைய வயதான காலத்துக்குப் போதுமான அளவு சேமிப்புகளை வைத்திருக்காமல் போகக் கூடும். பல மூத்த சிங்கப்பூரர்கள் தங்கள் வாழ்க்கைச் செலவுகளுக்குத் தங்களிடம் போதுமான அளவு பணம் இருக்குமா என்பது பற்றி கவலைப்படுகின்றனர் என்று எனக்குத் தெரியும். நீங்கள் கூடுதல் காலம் வேலை செய்வதற்கும், கூடுதலாக

சம்பாதித்து, உங்களுடைய வேலைஓய்வு சேமிப்புகளை அதிகரிப்பதற்கும் உதவ நாங்கள் மாற்றங்களைச் செய்கிறோம். வயதான காலத்திற்கு ஒரு சேமிப்பாக விளங்கும் உங்களின் வீடமைப்பு வளர்ச்சிக் கழக (வீவக) வீடுகளின் மதிப்பை நாங்கள் மேம்படுத்துவோம். மேலும், உங்கள் ஓய்வு காலத்தில் ஒரு நிலையான வருமானத்தையும், நிம்மதியையும் நீங்கள் அனுபவிப்பதற்கு நாங்கள் மத்திய சேம நிதி திட்டத்தையும் மேம்படுத்துவோம்.

15. ஆயினும், அரசாங்கத்தால் மட்டும் தனியாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ஒவ்வொருவரும் தத்தம் பங்கை வழங்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நமக்கு நாமே பொறுப்பு எடுத்துக்கொண்டு, சிறப்பாக செயல்படுவதற்கான முயற்சியை எடுத்து, நம் குடும்பத்தையும், வயதான காலத்தில் நம்மையும் கவனித்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில், மேலும் அதிக வெற்றி அடைந்திருக்கும் சிங்கப்பூரர்கள் நலிவுற்றவர்களுக்கு உதவத் தங்களின் பங்கை வழங்க வேண்டும். சமுதாயத்திலிருந்து நீங்கள் அதிகமாக பெறும்போது, உங்கள் சக குடிமக்களுக்கு ஏதாவது திருப்பிக் கொடுப்பதற்கான உங்கள் கடப்பாடு அதிகமாகிறது. உங்கள் பங்களிப்புகள் உங்கள் இதயத்திலிருந்து வர வேண்டும். பல சிங்கப்பூரர்கள் அமைதியாக இதைச் செய்திருக்கின்றனர். ஒரு தேசமாக வளர்வதற்கு, நாம் கருணை மிக்கவர்களாகவும், போட்டித்தன்மை மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் ஒருவரையொருவர் சிறப்பாக செயல்படுவதற்கு ஊக்குவிக்கும் அதே வேளையில், ஒன்றாகச் செயலாற்றி உதவி தேவைப்படுவோரைக் கவனித்துக்கொள்ளவும் வேண்டும்.

For online reference viewing only

<u>எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை</u>

16. இந்த பிரச்னைகளை ஒவ்வொன்றாக நாம் சமாளிப்போம். மேலும், இந்த நிச்சயமற்ற உலகில் ஏற்படக் கூடிய எல்லாப் பிரச்சினைகளையும் நாம் சமாளிப்போம். ஆயினும், நம் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் இருப்பதற்கான எல்லாக் காரணங்களும் நம்மிடம் இருக்கின்றன. உலகச் சூழ்நிலை சாதகமாக இருக்கிறது. காற்று நம் பக்கம் வீசுகிறது. நாம் மிகவும் ஆர்வமாக இருக்கிறோம். அதோடு நமது கப்பலும் தயாராக இருக்கிறது.

17. என் சக சிங்கப்பூரர்களே, நமக்கு ஏற்கனவே தெரிகிற ஒளிமயமான, விறுவிறுப்பான எதிர்காலத்திற்குள் பயணம் செய்வதற்கு இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொள்வோம். ஒன்றுசேர்ந்து, சிங்கப்பூரை மாற்றியமைத்து, நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறப்பு இல்லமாக சிங்கப்பூரை ஆக்குவோம்.

18. நான் எல்லா சிங்கப்பூரர்களுக்கும் மகிழ்ச்சிமிக்க தேசிய தின வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

For online reference
viewing only